## 2026.08.17 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. இலங்கையில் கல்விப் பேரவையை தாபித்தல்

ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், அதிபர், ஆசிரிய கல்வியியலாளர், கல்வி நிர்வாகம் போன்ற பொதுவாகக் கல்வித் துறையிலுள்ள அனைத்து தொழில் வகுதிகளையும் உள்ளடக்கியவாறு, இத் தொழில்வாண்மையாளர்களின் தரப்படுத்தல், பதிவு/அனுமதிப்பத்திரம், தரச் சான்றுப்படுத்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்தல் போன்ற பணிகளுக்கு நிறுவன ரீதியான கட்டமைப்பொன்றை நிறுவ வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதுதொடர்பாக ஆராய்ந்து விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக சிரேஷ்ட பேராசிரியர் திரு. ஓ.ஜீ.தயாரத்ன அவர்களின் தலைமையிலான குழுவொன்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2025.10.03 ஆம் திகதிய அறிக்கை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் ஆலோசனை உப செயற்குழுவின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள கல்விப் பேரவையை தாபித்தல் தொடர்பான உப செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு கிடைத்த அங்கீகாரத்தின் பிரகாரம் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பொதுமக்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர், தயாரிக்கப்பட்டுள்ள மீளாய்வு அறிக்கையும் குறித்த உப செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, உத்தேச கல்விப் பேரவையின் விடயதானத்தின் கீழ்க் கொண்டு வரப்படும் விடயங்கள் தொடர்பாக அரசியலமைப்பு மற்றும் வேறு சட்ட ரீதியான ஏற்பாடுகளின் கீழ் தற்போது அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களுடன் உரிய ஒருங்கிணைப்புக்களுடன் கல்விப் பேரவையைத் தாபிப்பதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. மனித உரிமைகள் தொடர்பாக அமைச்சுக்களுக்கிடையிலான நிரந்தரக் குழுவொன்றை தாபித்தல்

இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடாக மனித உரிமைகள் தொடர்பான 09 ஒப்பந்தங்களிலும் மற்றும் 05 மாற்று வழிமுறைப் பணிச்சட்டகங்களிலும் அரச பங்காளராக செயலாற்றி வருகின்றது. இச் சர்வதேச சமவாயங்களுக்கு மேலதிகமாக, அனைத்துலக பருவகால மீளாய்வில் இலங்கையும் கலந்து கொள்வதுடன், அதன் மூலம் மனித உரிமைகள் தொடர்பான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகளை சுயமாக முன்வந்து வெளியிடுவதற்கு இலங்கைக்கு வாய்ப்புக் கிடைக்கும். 2023 ஆம் ஆண்டில் குறித்த அனைத்துலக பருவகால மீளாய்வின் 04 ஆவது சுற்றின் கீழ் இலங்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள மீளாய்வுகளில், ஏனைய அரசுகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற விதந்துரைகளை அமுல்படுத்தும் போது அடைந்துள்ள முன்னேற்றங்களைக் குறிப்பிட்டு சுயமாக முன்வைக்கப்படுகின்ற இடைநிலை அறிக்கை அடுத்த மீளாய்வுக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு இலங்கைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இவ்வறிக்கையைத் தயாரிக்கும் பணிக்கு அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளிட்ட பயனுள்ள பல்தரப்புப் பங்காளர்களுடன் கூடிய தேசிய கட்டமைப்பொன்றைத் தாபிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக நடவடிக்கைகள் தொடர்பான தொடராய்வு மற்றும் அறிக்கையிடல் பற்றி பயனுள்ள உள்நாட்டுச் செயன்முறைக்கு நிரந்தர தேசிய பணிச்சட்டகமாக செயலாற்றுவதற்கு மனித உரிமைகள் தொடர்பான அமைச்சுக்களுக்கிடையிலான நிரந்தரக் குழுவொன்றைத் தாபிப்பதற்கு வெளி விவகார,



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும், மற்றும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. 2026 – 2030 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் தேசிய மருந்துகள் கொள்கையை அமுல்படுத்தல்

இலங்கையின் ஒட்டுமொத்த மக்களுக்கும் பாதுகாப்பான, பயனுள்ள, தரப்பண்பான மற்றும் நியாய விலையில் அத்தியாவசிய மருந்துகளை வழங்கல் என்பது அரசின் முன்னுரிமையான சுகாதாரக் கொள்கை நோக்கத்தை அடைவதற்காக தேசிய மருந்துகள் கொள்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தேசிய மருந்துகள் கொள்கையை காலத்தோடு தழுவியதாக இற்றைப்படுத்துவதற்காக 2020 தொடக்கம் 2025 வரையான காலப்பகுதியில் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், குறித்த பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. இதுவரை காணப்படுகின்ற தேசிய மருந்துகள் கொள்கையை அமுல்படுத்தும் போது கிடைத்த அனுபவங்கள், சமகால சுகாதார தேவைகள், உலகளாவிய சந்தையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், மருந்துகள் விநியோகச் சங்கிலியிலுள்ள சவால்கள் மற்றும் உள்நாட்டு மருந்துகள் உற்பத்தி தொடர்பாகவுள்ள புதிய தேவைகளைக் கருத்தில் கொண்டு, 2026 – 2030 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு இற்றைப்படுத்தப்பட்ட தேசிய மருந்துகள் கொள்கையை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, கீழ்க்குறிப்பிட்டுள்ள நோக்கங்களை அடைவதற்கு இயலுமாகும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள 2026 – 2030 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் தேசிய மருந்துகள் கொள்கையை முன்னுரிமைப் பணிகளாகக் கருத்தில் கொண்டு, துரிதமாக அமுல்படுத்துவதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- பொதுமக்கள் சுகாதாரத் தேவைகளுக்கு ஏற்புடைய சர்வதேச தரநியமங்களுக்கமைய, தரப்பண்பான, பாதுகாப்பான மருந்துகள் பேண்தகு வகையிலும் நியாயமான விலையிலும் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தல்.
- சுகாதார சேவை தொழில்வல்லுநர்களும், சுகாதார சேவைகளைப் பயன்படுத்துநர்களும் விஞ்ஞானபூர்வமாகவும் சரியாகவும், குறைந்த செலவில் அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய உற்பத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் தரப்பண்மை அதிகரித்தல் மற்றும் வீண்விரயத்தைத் தடுத்தல்.
- சான்றுப்படுத்தப்பட்ட பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் தரப்பண்புடன் கூடிய அத்தியாவசிய மருத்துவ உற்பத்திகளை வினைத்திறனாக உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு ஊக்குவித்தல்.

### 04. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மருத்துவமனையின் வசதிகளைப் பயன்படுத்தி, இலங்கை தேசிய வைத்தியசாலையின் இதய மற்றும் மார்புக் குழாய் அறுவைச் சிகிச்சை சேவைகளை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக போதனா மருத்துவமனை, நவீன உட்கட்டமைப்பு வசதிகள், நவீனரக மருத்துவ உபகரணங்கள் மற்றும் போதியளவான பௌதிக ரீதியான இயலளவுகளைக் கொண்டிருப்பினும், விசேட நிபுணத்துவ மருத்துவக் குழுவினர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கின்றமையால், தற்போது இவ்வவளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாமை கண்டறியப்பட்டுள்ளது. இலங்கை தேசிய வைத்தியசாலையின்

இதயநோய் மற்றும் மார்புக் குழாய் அலகு, உயரிய விசேட நிபுணத்துவ அறிவுடன் கூடிய மனித வளங்கள், , உயர் தொழிநுட்பம் மற்றும் அதிநவீன வசதிகளுடன் கூடிய, இலங்கையில் இதய மற்றும் மார்புக் குழாய் சத்திர சிகிச்சைகளுக்கான முன்னணி தேசிய நிலையமாக இயங்கி வருகின்றது. எனினும், சத்திர சிகிச்சைகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளமையால், தற்போது நீண்ட காத்திருப்புப் பட்டியல் காணப்படுகிறது. எனவே, இலங்கை தேசிய மருத்துவமனை சேவைகளின் விரிவாக்கமாக, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மருத்துவமனையின் இதய மற்றும் மார்புக் குழாய் அலகின் வசதிகளைப் பயன்படுத்தி, இலங்கை தேசிய மருத்துவமனையின் இதய மற்றும் மார்புக் குழாய் சத்திர சிகிச்சைக்கான காத்திருப்புப் பட்டியலிலுள்ள நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளல் மற்றும் விசேட நிபுணத்துவ சிகிச்சைகளையும் வழங்கும் வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையில் முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. குற்றவாளிகளை ஒப்படைத்தல் தொடர்பாக இலங்கைக்கும் போலந்து குடியரசுக்கும் இடையிலான ஒப்பந்தம்**

இலங்கையில் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்ட வேறொரு நாட்டுப் பிரஜைக்கு, அவருடைய தாய் நாட்டில் தண்டனையை அனுபவிப்பதற்கு இயலுமாகும் வகையில் 1995 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க குற்றவாளிகளை இடமாற்றுதல் சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. அத்துடன், வேறொரு நாட்டில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பிரஜை ஒருவர், தன்னுடைய எஞ்சிய தண்டனைக் காலத்தை இலங்கையில் கழிப்பதற்கு மீண்டும் இலங்கைக்கு ஒப்படைப்பதற்கு இச்சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களுக்கு குறித்த தண்டனையை தமது தாய் நாட்டிலேயே அனுபவிப்பதற்கு வாய்ப்புக்களை வழங்கி அவர்களுடைய சமூகப் புனர்வாழ்வுக்கு பங்களிப்பு வழங்கக்கூடிய வகையில், இலங்கை ஜனநாயக குடியரசுக்கும், போலந்து குடியரசுக்கும் இடையில் குற்றவாளிகளை ஒப்படைத்தல் தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. கொரியா வெண்களி மட்பாண்டப் பொறியியல் மற்றும் தொழிநுட்ப நிறுவகம் மற்றும் இலங்கையின் தொழிநுட்பவியல் நிறுவகத்திற்கும் இடையில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வசதிகளை வெளித்தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்**

இலங்கையின் தொழிநுட்பவியல் நிறுவனத்தின் ஆய்வுக் குழுவினரால் ‘இலங்கையின் கடலோரப் பிரதேசங்களிலுள்ள படிகக்கற்கள் மற்றும் சிலிக்கன் படிமங்களை பதனிடல் தொழிநுட்பத்தை விருத்தி செய்தல்’ எனும் பெயரிலான ஆய்வுக் கருத்தாக்க முன்மொழிவொன்று, கொரிய புத்தாக்க உற்பத்திகள் மேம்பாட்டுச் சங்கத்தால் 2025 ஆம் ஆண்டில் புலமைச் சொத்துப் பங்காண்மைக் கருத்திட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அக்கருத்திட்டம் இரண்டு கட்டங்களாக அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதலாவது கட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கொரிய குடியசின் கொரிய புத்தாக்க உற்பத்திகள் மேம்பாட்டுச் சங்கத்திற்கும் இலங்கை தொழிநுட்பவியல் நிறுவகத்திற்கும் இடையில் கையொப்பமிடுவதற்கு 2026.04.06 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை அமுல்படுத்துவதற்கு வெண்களி மட்பாண்டப் பொறியியல் மற்றும் தொழிநுட்ப நிறுவகம் மற்றும் இலங்கையின் தொழிநுட்பவியல் நிறுவகத்திற்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தின் மூலம் குறித்த ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தொழிநுட்பவியல் நிறுவனத்திற்குத் தேவையான நிதி, பொருட்கள், ஆய்வு உபகரணங்கள் மற்றும் தொழிநுட்ப

உதவிகளை, கொரிய வெண்களி மட்பாண்டப் பொறியியல் மற்றும் தொழிநுட்ப நிறுவகத்தின் ஒத்துழைப்புடன், கொரிய அரசிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான சட்டபூர்வமான அடிப்படையொன்று கிடைக்கும். அதற்கமைய, 'இலங்கையின் கடலோரப் பிரதேசங்களிலுள்ள படிகக்கற்கள் மற்றும் சிலிக்கன் படிமங்களை பதனிடல் தொழிநுட்பத்தை விருத்தி செய்தல்' கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் செயற்பாடுகளுக்கு கொரிய வெண்களி மட்பாண்டப் பொறியியல் மற்றும் தொழிநுட்ப நிறுவகம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தொழிநுட்பவியல் நிறுவகத்திற்கும் இடையில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வசதிகளை வெளித்தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. தேசிய இயந்திரோபகரணங்கள் நிறுவனத்திற்குச் சொந்தமாகவுள்ள, தற்போது அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பிலுள்ள பயன்படுத்தக் கூடிய வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை மாகாண சபை, பிரதேச சபைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு பாரப்படுத்தல்**

தேசிய இயந்திரோபகரணங்கள் நிறுவனத்திற்குச் சொந்தமான நாடளாவிய ரீதியில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் கனரக இயந்திரோபகரணங்கள் பல அரச அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. இச்சொத்துக்கள் தற்போது அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்படாததுடன், அவற்றில் குறிப்பிடத்தக்களவு இயந்திரோபகரணங்கள் அநுராதபுர நகர மத்தியில் அமைந்துள்ள பெறுமதியான காணித்துண்டில் தரித்து வைக்கப்பட்டுள்ளது. கிராமிய வீதிப் புனரமைப்பு, நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் ஏனைய உட்கட்டகமைப்பு வசதிகள் மேம்பாட்டுக்கு மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும் போது பயன்படுத்துவதற்குக் குறித்த வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை வழங்குமாறு வடமத்திய மாகாண சபை மற்றும் ஒருசில உள்ளூராட்சி நிறுவனங்களால் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் தற்போது காணப்படுகின்ற, முந்திய இயந்திரோபகரணங்கள் நிறுவனத்திற்குச் சொந்தமாகவிருந்ததும், பயன்பாட்டுக்கு உகந்ததான வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை மாகாண சபைகள், பிரதேச சபைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு தேவைக்கேற்ப வகையில், அரச விலைமதிப்பைச் செலுத்திப் பெற்றுக்கொள்வதற்கமைய, குறித்த நிறுவனங்களுக்கு பாரப்படுத்துவதற்கு வீடமைப்பு, கட்டுமானங்கள் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. குறைந்த வருமானங் கொண்ட குடும்பங்களில் கல்வி தேவைகளைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு கொடுப்பனவொன்றை வழங்குதல்**

2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் விசேட கல்வித் தேவைகளுடன் கூடிய மாணவர்களுக்கு, ஒர மாணவருக்கு 5,000/- ரூபா வீதம் மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த கொடுப்பனவை வழங்குவதற்கு தகைமைகளைப் பரிசீலிப்பதற்கு நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளிலும் கல்வி பயில்கின்ற குறைந்த வருமானங் கொண்ட குடும்பங்களில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்டுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், அவற்றில் 5,530 மாணவர்கள் தகைமைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர். அதற்கமைய, குறித்த மாணவர்கள் அனைவருக்கும் உரிய மாதாந்தக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு நிதியொதுக்கீடு செய்வதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. கணணிமய சீட்டிழுப்புக்கான அதிஷ்டலாப லொத்தர் சீட்டுக்களை அச்சிடுதல், விநியோகித்தல் மற்றும் கொண்டு வந்து ஒப்படைத்தலுக்கான பெறுகை**

தேசிய லொத்தர சபையால் கணணிமய சீட்டிழுப்புக்களான கொவிசெத, NLB ராசி சுபபலன், மெகா பவர், தன நிதானய, NLB ஜய, அத சம்பத மற்றும் சுபதவசக் போன்ற லொத்தர் சீட்டுக்களை ஒரு வருடகாலத்திற்கு ஒவ்வொரு லொத்தர் வர்த்தக நாமத்திற்கமைய தேசிய போட்டி விலைமுறிக்கோரல் முறைக்கமைய விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக, 05 விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. உயர்மட்ட பெறுகைக் குழுவின் விதப்புரைக்கமையவும் மற்றும் பெறுகை மேன்முறையீட்டு சபையின் விதப்புரையின் அடிப்படையில் உரிய லொத்தர் சீட்டுக்களை அச்சிடுதல், விநியோகித்தல் மற்றும் கொண்டு வந்து ஒப்படைத்தல் பெறுகைககளின் கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரர்களுக்கு கீழ்க்காணும் வகையில் வழங்குவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| விலைமனுதாரரின் பெயர் | லொத்தர் சீட்டின் வர்த்தக நாமம் | லோத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை அடிப்படையில் பெறுமதி (பெறுமதிசேர் வரியில்லாமல்) (ரூ.மில்) |
|---|---|---|
| அரச அச்சுத் திணைக்களம் | கொவிசெத | 103.42 |
| | NLB ராசி சுபபலன் | 91.30 |
| | மெகா பவர் | 88.22 |
| | தன நிதானய | 73.16 |
| சிலோன் பிஸ்னஸ் அப்லயன்சஸ் (தனியார்) கம்பனி | அத சம்பத | 83.36 |
| | NLB ஜய | 67.80 |
| | சுபதவசக் | 72.86 |

**10. தித்வா புயல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறு நீர்ப்பாசனப் புனரமைப்புக்களுக்கான துரித வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தல்**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கையில் பாதிப்புக்களை ஏற்படுத்திய தித்வா புயல் அனர்த்தத்தால் 1,599 சிறு குளங்கள், 1,686 பாசன அணைக்கட்டுக்கள் மற்றும் 4,042 கால்வாய்கள் சேதமடைந்துள்ளன. அதனால், நெற் செய்கைக்குத் தேவையான நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவப் பிரச்சினைகளுடன் கூடிய நிலைமைகளாக மாறியுள்ளன. சேதமடைந்துள்ள 883 சிறுபாசனங்களை 2026 ஆம் ஆண்டில் புனரமைப்பதற்கு கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்கு மேலதிகமாக, புனரமைக்கப்பட வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ள 5,935 சிறு குளங்கள், கால்வாய்கள் மற்றும் பாசன அணைக்கட்டுக்கள் காணப்படுகின்றன. கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான பௌதீக மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்துவதால் மாத்திரம் சேதமடைந்துள்ள சிறுபாசனங்களைத் துரிதமாகப் புனரமைத்து வழங்க முடியாமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கு மாற்று வழிமுறையாக இலங்கை

மகாவலி அதிகாரசபையின் இணைக் கம்பனியாக நிறுவப்பட்டுள்ள மகாவலி ஆலோசனைப் பணியகத்தின் மூலம் உரிய பணிகளைத் துரிதமாக மேற்கொள்வதற்குத் தேவையான தொழிநுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, தித்வா புயல் அனர்த்தத்தால் சேதமடைந்துள்ள 5,935 சிறுபாசனங்களைப் புனரமைப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள 12,170 மில்லியன் ரூபாய்கள் செலவில், 2,000 மில்லியன் ரூபாய்களை துரித வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு 2026 ஆம் ஆண்டிலும், எஞ்சிய தொகையை 2027 ஆம் ஆண்டிலும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கும், குறித்த சிறுபாசனங்களின் புனரமைப்புப் பணிகளில் உரிய தொழிநுட்ப ஆலோசனைகளை மகாவலி ஆலோசனைப் பணியகத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கும் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. செத்சிரிபாய கட்டம் III இன் எஞ்சிய கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய்தல்**

அரச மற்றும் பகுதி அரச துறையில் நிர்வாக அலுவலகங்களுக்கான இடவசதிகளுக்கு அதிகரித்து வருகின்ற கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக செத்சிரிபாய கட்டம் III கருத்திட்டத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பித்துள்ளது. ஆரம்பகட்டத்தில் குறித்த கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு மூலதனச் செலவாக 16.7 மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் நிலக்கீழ்க் கட்டுமான அத்திவாரம் மற்றும் மேல்கட்டுமானத்திற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, கருத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 03 மாடிகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன. ஆயினும், பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார உறுதிப்பாடற்ற நிலைமை, மூலப்பொருட்களின் தட்டுப்பாடு, இறக்குமதி மட்டுப்பாடுகள் மற்றம் கட்டுமானத் துறையில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களால் ஏற்பட்ட சிரமங்களின் அடிப்படையில் இருதரப்பினர்களின் உடன்பாடுகளுடன் இக்கருத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஆனாலும், அரச மற்றும் பகுதி அரச நிறுவனங்களின் அலுவலக வசதிகளைக் கருத்தில் கொண்டு, நிர்மாணப் பணிகளைத் துரிதமாகப் பூர்த்தி செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, கருத்திட்டத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக, இக்கருத்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதியிடல் அபிவிருத்திப் பணியாக அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், கட்டிடத்தில் நிறுவுவதற்கு அடையாளங் காணப்பட்டுள்ள வலுசக்தி அமைச்சு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், அரச மருந்துகள் கூட்டுத்தானம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்றவற்றுக்கு ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இடவசதி அளவுக்கு சரிவிகிதமாக நிதிப் பங்களிப்புக்களைப் பெற்றுக் கொண்டு கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கருத்திட்டத்திற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள செலவுகள், கருத்திட்டத்தின் எஞ்சிய பகுதியைப் பூர்த்தி செய்வதற்கு செலவு செய்ய வேண்டிய தொகை, ஏனைய செலவுகள் மற்றும் உரிய வரிகள் உள்ளிட்ட கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு 38.48 பில்லியன் ரூபாய்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் ஆரம்ப விடயதானத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தகாரரான M/s Maga Engineering (Pvt) Ltd இனால் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதி முன்மொழிவு உள்ளிட்ட தொழிநுட்ப முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த முன்மொழிவுகளின் விலகல்களை மீளாய்வுக் குழுவின் மூலம் மதிப்பீடு செய்த பின்னர், கருத்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை (பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி, ஈடு செய்ய வேண்டிய செலுத்தல்கள், திட்டமிடப்படாத நிதி, வரி மற்றும் நாளாந்த வேலைகள் தவிர்ந்த) 22.76 பில்லியன் ரூபாய்கள் தொகைக்குப் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தக்காரர் உடன்பாடு தெரிவித்துள்ளார். அதற்கமைய, பூர்த்தி செய்யப்பட்டுள்ள வேலைகளின் பெறுமதி மற்றும் ஈடு செய்யப்பட வேண்டிய செலுத்தல்கள் உள்ளிட்ட 22.58 பில்லியன் ரூபாய்கள் தொகைக்கு (திட்டமிடப்படாத நிதி, வரி மற்றும் நாளாந்த வேலைகள் தவிர்ந்த) M/s Maga Engineering (Pvt) Ltd உடன் திருத்தப்பட்ட

ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் மருந்துகளைப் பெறுகை செய்தல்**

அரசின் சுகாதாரத் துறைக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களைப் பற்றாக்குறையின்றி விநியோகிப்பதில் ஏற்படுகின்ற பெறுகைச் செயன்முறையிலுள்ள சவால்களைக் கருத்தில் கொண்டு, அவசரமாகத் தேவைப்படுகின்ற மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்காக நம்பகமான பொறிமுறையொன்றை உருவாக்குவது தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கு சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, அரச மருந்துகள் கூட்டுத்தாபனம், மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் 'அத்தியாவசிய மற்றும் அரிய வகையான நோய்களுக்கான மருந்துகளைப் பெறுகை செய்வதற்கான நீண்டகால பங்காண்மை' எனும் பெயரிலான கருத்தாக்கப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், உயிர்காக்கும் முக்கிய மருந்துகள் உற்பத்தியின் பெறுகை மற்றும் விநியோகத்திற்கு இலங்கை அரசுடன் ஒத்துழைப்புடன் செயலாற்றுவதற்கான பணிச்சட்டகம் முன்மொழியப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள பங்காண்மையின் கீழ் இறக்குமதி செய்யப்படும் அனைத்து மருந்துகளும் இலங்கையில் விநியோகிப்பதற்கு முன்னர் குறித்த ஒழுங்குமுறைப்படுத்தல்கள் மற்றும் தரப்பண்பு நியமங்களுக்கு இணங்குகின்றமையை சான்றுப்படுத்துவதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை செயலாற்றி வருகின்றது. அதற்கமைய, அத்தியாவசிய மருந்துகளைப் பற்றாக்குறையின்றி விநியோகிப்பதற்கு இயலுமாகும் வகையில் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பயன்பாட்டு மருத்துவ உபகரணங்கள், விசேட வேலைத்திட்டங்களுக்கான மருந்துகள் மற்றும் அரிய வகை நோய்களுக்கான மருந்துகள் பெறுகை மற்றும் விநியோகத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் இணைந்து நிதி ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. நாடகக் கலை, அரங்கக் கலைகள் மற்றம் இலக்கியத் துறை மேம்பாட்டுக்கான கருத்திட்டங்களை அமுல்படுத்தல்**

இலங்கை கலைக் கழகத்தின் கீழ் 09 விடயதானங்களுக்கான 09 உப கழகங்கள் இயங்கி வருவதுடன், போதியளவு நிதியொதுக்கீடுகள் இன்மையால், இவ் உப கழகங்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் அவற்றின் பணிகள் தேசிய மட்டத்தில் மற்றும் தலைநகரில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், சமகாலத்தில் நேயர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை, புதிய படைப்புக்கள் குறைவடைந்துள்ளமை, அரங்கேற்ற மண்டபங்களின் பற்றாக்குறை மற்றும் சமூக ஊடகங்களின் போட்டித்தன்மை போன்ற காரணங்களால் நாடகக் கலை, அரங்கக் கலைகள் மற்றம் இலக்கியத் துறைகளை தேசிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் மறுமலர்ச்சி செய்தல், பிரதேச ரீதியில் கலைஞர்களை வலுவூட்டல் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு கலாச்சார மரபுரிமைகளை கையளித்தல் போன்ற நோக்கங்களுடன் தகுந்த கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 50 மில்லியன் ரூபாய்கள் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த நிதியைப் பயன்படுத்தி கீழ்க்குறிப்பிட்ட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- இலங்கை கலைக் கழகத்தின் கீழ் இயங்குகின்ற 09 உப கழகங்களின் விடயதானங்களை பிரதேச மட்டத்தில் மேம்படுத்தல்.

- அரச நாடக விழாவை பல்கலைகளாக வகைமைப்படுத்தி நடாத்துதல் மற்றும் புதிய நாடகப் படைப்புக்கள் மற்றும் அரங்கேற்றங்களை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல்
- பன்முகப் பண்பாட்டு நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு பன்முக பண்பாட்டு கலை நிகழ்வுகளை நடாத்துதல்
- பண்பாட்டு நிலையங்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள சினிமா வளாகங்களுக்கு வசதிகளை வழங்குதல்

.

**14. தித்வா புயல் அனர்த்தத்தால் இடர்களுக்குள்ளாகியுள்ள தேசிய அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகத்தின் ஆய்வுகூடக் கட்டிடத் தொகுதியின் கட்டமைப்பு ரீதியான உறுதிப்பாட்டை அத்தாட்சிப்படுத்தல்**

1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க தேசிய அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள தேசிய அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் இலங்கையில் அடிப்படைய விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்ற மற்றும் மனித மூலதன அபிவிருத்திக்கு முக்கிய பங்களிப்புக்களை வழங்குகின்ற தேசிய ரீதியான முன்னணி ஆராய்ச்சி நிறுவகமாகும். 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நாடளாவிய ரீதியில் பாதிப்புக்களை ஏற்படுத்தி தித்வா புயலால் ஏற்பட்ட கடும் மழை காரணமாக, கண்டி, ஹந்தான பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவக வளாகத்திலும் மற்றும் சுற்றியுள்ள பிரதேசத்திலும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அதனால், நிறுவனத்தின் பிரதான ஆய்வுகூடக் கட்டிடத்தொகுதியின் கட்டமைப்பின் உறுதிப்பாடு மிகவும் மோசமான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதுடன், அதனை அண்டியுள்ள வதிவிடதாரர்களுக்கும் உயிர் ஆபத்துக்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்புக்கும் மோசமான ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவகத்தால் உரிய பூகோள தொழிநுட்ப மற்றும் கட்டமைப்பு மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், சேதமடைந்துள்ள பிரதேசத்தின் உறுதிப்பாட்டுக்கு பாதுகாப்பு வேலியொன்றை அமைத்தல் உள்ளிட்ட, மீள்கட்டமைப்புக்களை துரிதமாக வேண்டுமென விதந்துரைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான செலவாக 250 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை திட்டமிடல், பூகோளவியல் தொழிநுட்ப மதிப்பீடு மற்றும் பெறுகைச் செயன்முறையை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு நேரடியாக ஒப்பந்த அடிப்படையில் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்காக விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. கட்டான பொலிஸ் கல்வியியல் கல்லூரிக்கான புதிய விடுதிக் கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்யும் ஒப்பந்தத்தை வழங்குதல்**

கட்டான பொலிஸ் கல்வியியல் கல்லூரிக்கான புதிய விடுதிக் கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளுக்கு ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு, உரிய கருத்திட்டத்தின் பெறுகை நிறுவனமாகச் செயற்படும் கட்டிடங்கள் திணைக்களத்தால் தேசிய போட்டி விலைமுறிக் கோரல் செயன்முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 10 விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர். உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான சென்ரல் இன்ஜியனியரிங் சேர்விசஸ் (தனியார்) கம்பனிக்க கட்டான பொலிஸ் கல்வியியல் கல்லூரிக்கான புதிய விடுதிக் கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்யும் ஒப்பந்தத்தை 614.98 மில்லியன் ரூபாய்கள் (பெறுமதி சேர் வரியில்லாமல்) தொகைக்கு வழங்குவதற்காக வீடமைப்பு, கட்டுமானங்கள் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

16. **இலங்கைக்கு வெளியே அனுமதியின்றி பணமாற்றல் செய்தல் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் குற்றமாக அறிமுகப்படுத்தக் கூடிய வகையில் இச்சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

இலங்கையிலுள்ள ஒரு நபர் பண்டங்களை இறக்குமதி செய்வதற்காக முற்பணக் கொடுப்பனவாக நாட்டுக்கு வெளியே பணம் செலுத்திய பின்னர் நியாயமாக காலப்பகுதியில் அதற்குச் சமமான பண்டங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யாமல் இருப்பின், அவ்வாறான நாட்டுக்கு வெளியே மேற்கொண்ட பணப் பரிமாற்றல்களை அங்கீகாரமற்ற செலாவணி மாற்றலாக கருத்தில் கொள்ள முடியும். வெளிநாட்டு செலாவணிகள் சட்டத்தில் தற்போது காணப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழ் அவ்வாறான அங்கீகாரமற்ற பணப்பரிமாற்றல்கள் தொடர்பாக மேற்கொள்ளக் கூடிய ஒரேயொரு படிமுறையாக இலங்கை மத்திய வங்கியால் குறித்த பணப்பரிமாற்றலின் தொகைக்குச் சமமாக இலங்கை ரூபாய்களில் அபராதமாக விதிக்கப்படுவது மாத்திரமேயாகும். அவ்வாறான அங்கீகாரமற்ற பணப்பரிமாற்றல்கள் குற்றவியல் குற்றமாக வெளிநாட்டு செலாவணிகள் சட்டத்தில் குறிப்பிடப்படாமையால், குற்றவியல் வழக்கைத் தொடர்வதற்கான சட்ட ரீதியான ஏற்பாடுகளுக்கு இச்சட்டத்தில் இல்லை. அதனால், இலங்கைக்கு வெளியே அங்கீகாரமற்ற வகையில் பணப்பரிமாற்றல்களை மேற்கொள்கின்றமை, வெளிநாட்டு செலாவணிகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் குற்றமாக நிறுவுவுதன் மூலம் புலனாய்வு நிறுவனங்களுக்கும், சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கும் ஏற்புடைய சட்டத்தின கீழ் அவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக பயனுள்ள வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிடைக்குமெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்ற அங்கீகாரமற்ற பணப்பரிமாற்றல்களை குற்றவியல் குற்றமாக அறிமுகப்படுத்துவதற்கு வெளிநாட்டு செலாவணிகள் சட்டத்தின் கீழ் விசேட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிகள் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

17. **2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மற்றும் (123 ஆம் அத்தியாயமான) 1891 ஆம் ஆண்டின் 16 ஆம்இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்குச் சமர்ப்பித்தல்**

அரச நிறுவனங்கள் மூலம் சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணங்கள் திருத்தம் மற்றும் புதிய கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான ஏற்பாடுகள் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் அதனுடன் விளைவாய்ந்த ஏனைய சுற்றறிக்கைகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டமொன்றின் மூலம் அல்லது வேறெந்த சட்டத்தின் மூலம் கட்டணங்களை விதித்தல், அறவிடுதல் அல்லது திருத்தம் செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு குறித்த சட்டம்∴ஒழுங்குவிதிகள் மூலம் விதிக்கபட்டுள்ள விதத்தில் குறித்த கட்டணங்களைத் திருத்தம் செய்ய முடியும். 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் 477 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேணடிய 527 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் மூலம் கட்டணங்கள் விதிக்கப்பட முடிவுதுடன், 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ், நிதி வடயதான அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து உரிய சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் மூலம் கட்டணங்களை விதிக்க முடியும். 2303/07 ஆம் இலக்க 2022.10.25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இறுதியாக கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் சேவைக் கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதனால், சமகால நிலைமைகளுக்கு ஏற்புடைய வகையில் கட்டணங்களைத் திருத்தம் செய்து

விதிக்கப்பட்டுள்ள 2026.07.06 ஆம் திகதிய 2496/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள கம்பனிகள் (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள்/சங்கங்கள் (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**18. இராவணா எல்ல சரணாலயத்தில் அமைந்துள்ள நில்திய தடாகத்தை அண்டிய பகுதியில் சுற்றுலாத்துறை நடவடிக்கைகள், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலின் கீழ் ஆரம்பித்தல்**

பதுளை மாவட்டத்தில், எல்ல பிரதேச செயலகப் பிரிவில், கரந்தகொல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் இராவணா எல்ல சரணாயலயத்தின் உள்ளக குகைத் தொகுதியில் அமைந்துள்ள நில்திய தடாகமானது அரியவகையான நீர் மூலமாகும். அவ்விடத்தில் காணப்படுகின்ற விசேடமான பூகோளப் பண்புகளால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் பிரபலமான ஒரு உல்லாசக் காட்சிகாண் இடமாக உள்ளது. நில்திய தடாகம் பாதுகாக்கப்பட வேண்டிய அரியவகை இயற்கை வளமாக இருக்கின்றமையால், அவ்விடத்தை சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை மிகவும் கண்காணிப்புடனும் ஒழுங்குமுறைப்படுத்தலுடனும் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியப் பணியாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கான முன்மொழிவுகள் மற்றும் விதந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் உரி யஅரச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய வகையில் தொழிநுட்பக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், இக்குழுவால் ஆய்வறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில், சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை சட்டவரைஞரால் சரிபார்த்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, விலங்கினங்கள் மற்றும் தாவரஇனங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய உரிய ஒழுங்குவிதிகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு சுற்றாடல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**19. கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மரினா ஹோட்டல் ஹோல்டிங் (பிறைவெட்) லிமிட்டட், செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைநிலை வணிகமாகப் பெயரிடுவதற்காக 2026.03.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பிறைம் மெல்வா போர்ட் சிற்றி (பிறைவெட்) லிமிட்டட் மற்றும் ஹோம் லான்ட்ஸ் சிற்றி (பிறைவெட்) லிமிட்டட் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைநிலை வணிகமாகப் பெயரிடுவதற்காக 2026.05.04 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த நிறுவனங்களை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைநிலை வணிகமாகப் பெயரிடுவதற்குரிய 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| | |
|---|---|
| மெரீனா ஹோட்டல் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் | 2483/17 ஆம் இலக்க 2026.04.10 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் |
| ஹோம் லேன்ட்ஸ் போர்ட் சிட்டி (பிரைவெட்) லிமிடெட் | 2488/03 ஆம் இலக்க 2026.05.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் |
| பிரைம் மெல்வா போர்ட் சிட்டி (பிரைவெட்) லிமிடெட் | 2488/04 ஆம் இலக்க 2026.05.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் |

**20. 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாத்தல்' சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையின் அடிப்படையில், குறித்த விடயங்களுக்குரிய அடிப்படைச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கான விசேட நிபுணத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இத்தொழிநுட்ப விசேட நிபுணத்துவக் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாத்தல்' எனும் பெயரிலான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு 2026.08.10 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**